[2002 மார்ச் 14

தாழ்த்தப்பட்ட மக்களின் இட ஒதுக்கீடு முழுமையாகப் பின்பற்றப்பட வேண்டுமென்பதற்காக, வெற்றிடங்கள் 19 இடங்கள், ஒன்றுக்கு ஒன்று என்ற விகிதத்திலே நிரப்பப்பட்டு, அது கடைசியிலே ஆணை பிறப்பிக்கப்பட்ட நிலையிலே நிறுத்தப்பட்டு, அதற்குப் பின்பு உயர் நீதிமன்றத்திற்குப் போய், உயர் நீதிமன்றத்திலும் உத்தரவு பெற்று அந்தப் பணியாளர்கள் வேலை கைக்கெட்டி வாய்க்குக் கிடைக்கவில்லை என்ற அந்தக் கவலையோடு ஓர் ஆண்டுகாலமாகத் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை மீண்டும் பணியிலமர்த்த கூட்டுறவுத் துறை முன்வருமா என்பதை உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியிலே 1:1 என்ற அந்த அடிப்படையிலே, அந்தப் பட்டியல் பெறப்பட்டு, இன்டர்வியூ நடத்தப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னாலே, கடந்த ஆட்சியினுடைய அந்த நிர்வாகச் சீர்கேட்டின் காரணமாக அது நிறுத்தப்பட்டிருக்கிறது. தற்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிற அந்த விவரங்களை இந்த அரசு ஆராயும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 30, திரு. ஜே. ஹேமச்சந்திரன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

30—

தொழிலாளர்களுக்கு மருத்துவமனை

***5618—திரு. ஜே. ஹேமச்சந்திரன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் முந்திரித் தொழிலாளர்களுக்காக மருத்துவமனைகள் அமைக்கப்பட்டுள்ளனவா?

(ஆ) எந்தெந்த இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன?

(இ) அவற்றில் எத்தனை தொழிலாளர் வீதம் 1999-2000 ஆம் வருடத்தில் மருத்துவ உதவி பெற்றுள்ளார்கள்?

மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, வாழ்த்தி, வழிபடுகிறேன். அம்மா, உங்களைத் தாய் என்பேன், தந்தை என்றும் அழைப்பேன். உங்களின் சேய் என்றும் எங்களின் சிந்தையில் இனிக்கும் வார்த்தையை உங்களின் பொற்பாதம் தொட்டு வணங்கி, நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். இன்னவன், இனியவன் என்று யாரும் அறியா என்னை இந்த மண்ணின் அமைச்சராக்கிய எங்கள் குல தெய்வம் அம்மா அவர்களை என் பிறப்புக்கெல்லாம் மறக்கமாட்டேன். அம்மா காட்டிய வழியில் நடந்து, தூய நெஞ்சத்துடன் கடுமையாக உழைத்து, கழக ஆட்சிக்கும், அம்மா அவர்களுக்கும் பெருமை சேர்ப்பேன். எளியவனுக்கு எளியவனாகிய என்னை அமைச்சராக்கிய அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்குவதைத்தான் எனக்குக் கிடைத்த பெருமையாக, பாக்கியமாகக் கருதுகிறேன்.

விடை—

(அ) ஆம். கன்னியாகுமரி மாவட்டத்தில் முந்திரி ஆலைத் தொழிலாளர்களுக்காக மூன்று மருத்துவமனைகள் அமைக்கப்பட்டுள்ளன.

(ஆ) அவை, நித்திரவிளை, இடைக்கோடு மற்றும் குழித்துறை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

(இ) அங்கு காப்பீட்டாளர்களில் 1-9-1999 முதல் 31-3-2000 வரை கீழ்க்கண்டவிதம் சிகிச்சை பெற்றுள்ளனர்:

நித்திரவிளை:	13,237
இடைக்கோடு:	11,286
குழித்துறை:	13,237

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே ஒரு தாலுக்காவிலே, விளவங்கோடு தாலுக்காவிலே மட்டுந்தான் இந்த 3 மருத்துவமனைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் இரண்டு தாலுக்காக்களில் முந்திரித் தொழிலாளர்கள் ஏராளமாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அமைச்சர்

அவர்கள் படித்ததிலேயிருந்தே ஒவ்வொரு மருத்துவமனையிலேயும் 16,000த்திற்கும் அதிகமான ஆட்கள் ஒவ்வொரு வருடத்திலும் வைத்திய உதவி பெற்று வருகிறார்கள் என்பது தெரிகிறது. ஆகவே, கல்குளம் தாலுக்காவிலேயும், அதோடு இணைந்திருக்கிற தோவாளை தாலூக்காவிலேயும் வேலை செய்கிற முந்திரி ஆலைத் தொழிலாளர்களுக்கு வசதி செய்து தருகிற முறையில் திருவட்டாறிலும், திங்கள் நகரிலும் ஒவ்வொரு மருத்துவமனையை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? அதேபோன்று, தற்போது இயங்கிக் கொண்டு இருக்கின்ற மருத்துவமனைகளிலே முழு நேரங்களிலும் மருத்துவர்கள் இல்லை என்ற ஒரு குறைபாடு அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா, அதைப் போக்குவதற்கு, இந்த மருத்துவமனை நேரங்களில் மருத்துவர்களும், மற்ற சிப்பந்திகளும் கட்டாயமாகச் செயல்பட வேண்டும் என்று வலியுறுத்தி, அதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்படுமா?

முற்பகல் 11-10

மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கருங்கல் என்ற இடத்தில் மேலும் தொழிலாளர் அரசு ஈட்டு மருந்தகம் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தற்போது இயங்கி வரும் 3 மருத்துவமனைகள் ஒவ்வொன்றிலும் 2 மருத்துவர்கள் பணியாற்றுகிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(ஆ) குறுகிய கால வினா

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறுகிய கால வினா எண் 1, திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

குறுகிய கால வினா எண் 1—

பீடித் தொழிலாளர்களுக்கு வீடுகள்

***17871—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—